DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC .105/2022
**Depositions of PW .3**

| Name | மலையரசி | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd Day of July 2025

**22.07.2025**
( எதிரி ஆஜர். )
**முதல் விசாரணை**

நான் தற்போது ஸ்ரீவில்லிபுத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.10.2021 ஆம் தேதியன்று சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது அன்றைய தினம் உதவி ஆய்வாளர் காசிராஜன் என்பவரால் பதிவு செய்யப்பட்டு முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் நிலை குற்ற எண்468/2021 இதச பிரிவுகள் 420, 468 மற்றும் லாட்டரியினை ஒழுங்குபடுத்தும் சட்டம் பிரிவு 5, 7(3) – இன் கீழான வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளான தலைமை காவலர் சுரேஷ்கண்ணன், முதல் நிலை காவலர் கணேஷ்கண்ணன் ஆகியோரை நான் விசாரித்த போது அவர்கள் உதவி ஆய்வாளர் காசிராஜன் என்பவரிடம் அளித்த வாக்குமூலங்களையே என்னிடமும் அளித்ததால் நான் அதனை தனியாக பதிவு செய்யவில்லை. பின்னர் வழக்கினை பதிவு செய்த உதவி ஆய்வாளர் காசிராஜன் என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்து எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள் 420, 468

மற்றும் லாட்டரியினை ஒழுங்குபடுத்தும் சட்டம் பிரிவு 5, 7(3) – இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

உதவி ஆய்வாளர் காசிராஜன் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் எனது உத்தரவின் படி ரோந்து சுற்றி கண்காணித்த போது எதிரியை கைது செய்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் காசிராஜன் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் தாங்கள் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது சம்பவ இடத்தில் எதிரியை பார்த்ததாக சொல்லவில்லை என்றால் வழக்கான ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது எதிரியை பார்த்ததாக கூறவில்லை. தகவல் கிடைத்து ரோந்து பணியில் ஈடுபட்டிருந்ததாக சொல்லியுள்ளார். சாட்சிகள் தலைமை காவலர் சுரேஷ்கண்ணன், முதல் நிலை காவலர் கணேஷ்கண்ணன், உதவி ஆய்வாளர் காசிராஜன் ஆகிய மூவருமே போலீஸ் பார்ட்டியை கண்டதும் தப்பி ஓட முயன்ற எதிரியை பிடித்து விசாரித்ததாக தங்களது வாக்குமூலங்களில் கூறியுள்ளனர் என்றால் சரிதான்.

2) உதவி ஆய்வாளர் காசிராஜன் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் 10 அடி தூரம் ஓடிய எதிரியை மடக்கி பிடித்து விசாரித்தோம் என்று சொல்லியுள்ளாரா என்றால் ஓடி முயற்சித்த எதிரியை பிடித்ததாக சொல்லியுள்ளார். அ.சா.ஆ.4 M என எழுதப்பட்ட துண்டுசீட்டில் M என்ற எழுத்து எதனை குறிக்கும் என்றால் மகாராஷ்டிரா மாநிலத்தை குறிக்கும். இந்த வழக்கின் சம்பவ காலத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் லாட்டரி விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. லாட்டரி சீட்டுகள் பொதுவாக பல வண்ணங்களில் அச்சிடப்பட்டதாக இருக்கும் என்றால் சரிதான். தமிழ்நாட்டில் லாட்டரி விற்பனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்ததால் M என்ற எழுத்தினை எழுதி துண்டு சீட்டுகளாக

எதிரி விற்பனை செய்துள்ளார். உதவி ஆய்வாளர் காசிராஜனால் பல வண்ணங்களில் அச்சிடப்பட்ட லாட்டரி எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தை நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். மாதிரி வரைபடம், பார்வை மகஜர் ஆகிய இவ்வழக்கில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும், அதனடிப்படையில் வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டுள்ளது.

3) உதவி ஆய்வாளர் காசிராஜன் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் சம்பவ இடத்தில் தனிநபர்களை விசாரித்ததாகவோ சாட்சியாக இருப்பதற்கு முன்வராததாக கூறப்படும் தனிநபர்களின் பெயர், முகவரி விவரங்களை என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். எதிரியின் மீது சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் இதற்கு முன்பு எந்த ஒரு குற்றவழக்கும் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். எதிரியின் தகப்பனார் நாராயணன் என்பவர் பள்ளப்பட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவராகவும், அவரது பெயரில் தான் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு அருகே உள்ள நாராயண ரெஸ்டாரன்ட் உள்ளது என்றாலும் சரிதான். ஊராட்சி தேர்தலில் எதிரியின் தகப்பனார் மீது முன்விரோதம் கொண்ட நபர்களின் தூண்டுதலின் பேரில் எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரியின் மீது பொய்யாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.